(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) உயர்நீதி மன்றத்துடன் கடிதப் போக்குவரத்தில் உள்ளது.
(பிற்பகல் 4-10)

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் பதவிகள் அனைத்தும் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் பதவிகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, சப்-மாஜிஸ்ட்ரேட் பதவிகளையும், டிஸ்ட்டிரிக்ட் முனசீப் பதவிகளையும் ஒன்றாக ஆக்குவது என்பதுதான் 'இன்ட்டெக்ரேஷன்' ஆகும். இந்த இணைப்பு பற்றி உயர்நீதி மன்ற அலுவலர்களைக் கலந்து ஆலோசித்ததில், அவர்களும் கொள்கையளவிலே ஒத்துக்கொண்டார்கள். நடைமுறைப் படுத்துவதில் என்னென்ன சிக்கல்கள் ஏற்படும் என்பது பற்றி கடிதப் போக்குவரத்துக்கள் நடந்துகொண்டிருக்கின்றன.

Thiru A. R. DAMODARAN : Sir, it is reported that there are over 100 Second Class Magistrates who have been appointed on a temporary basis. May I know whether, until a decision is taken, none of these persons will be ousted from service?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இடைக்காலத்தில் நியமிக்கப்பட்ட அவர்கள் எல்லாம் ரெகுலரைஸ் பண்ணப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலே அரசாங்கம் அதைப் பரிசீலித்து எந்த அளவுக்கு வேகமாக ரெகுலரைஸ் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு ரெகுலரைஸ் செய்து வருகிறோம். இதற்கு இடையிலே இன்டெக்ரேஷன் ஆகுமா என்பது சந்தேகம்தான். கடிதப் போக்குவரத்தில் இப்போது இருந்துகொண்டிருக்கின்றது. இந்தக் காரணத்திற்காக அவர்கள் பாதிக்கப் படாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்வோம்.

* 176. *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to abolish the present Tamil Nadu Magisterial Service and merge the same with the Tamil Nadu State Judicial Service ; and

(*b*) if so, the details thereof?

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தற்போதுள்ள தமிழ்நாடு மாஜிஸ்டிரேட்டுகள் பணியாளரமைப்பை நீக்கி அதை தமிழ்நாடு அரசு நீதித்துறை பணியாளரமைப்புடன் இணைத்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

1975 மார்ச் 24]

(இ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) முதல், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளை டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புடன் ஒன்றாக இணைக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, முதலிலேயே நான் அதைத் தான் கேட்டேன். இரண்டாவது நிலையில், செகண்ட் கிளாஸ் நிலையில் உள்ள மாஜிஸ்டிரேட்டுகள் அனைவருமே பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் ஏற்கெனவே கேள்வி கேட்டுவிட்டார்கள். நானும் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கின்றேன். சப்-மாஜிஸ்டிரேட்டுகள் எல்லாம் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகளாக இருக்கின்றார்கள். எஸ். டி. எம். எல்லாம் முனசீப் கேடர். அவர்களுக்கு பர்ஸ்ட் கிளாஸ் பவர்ஸ் கொடுக்கப்பட்டிருக் கின்றன. ஜுடிசியல் சப்-மாஜிஸ்ட்ரேட் என்று சாதாரணமாகச் சொல்லப் படுகின்ற நண்பர்கள் எல்லாம் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கேடருக்கு மாற்றப்பட வேண்டும் என்பதுதான் ப்ரபோஸல். அதற்காகத்தான் இன்ட்டெக்ரேஷன் என்பது. ஜுடிசியல் சப்-மாஜிஸ்ட்ரேட், டிஸ்ட்ரிக்ட் முன்சீப் இவர்கள் இரண்டு பேர்களையும் ஒரே கேடராக்கி விட்டபின் டிஸ்ட்ரிக்ட் முன்சீப்-கம்-சப்-மாஜிஸ்ட்ரேட் என்ற அளவுக்கு அவர்களுக்கு அதிகாரம் வரும். இதுதான் இப்போது பரிசிலனையில் இருக்கிறது.

Surplus Paddy in Kanyakumari District

* 177. *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any representation has been received to the effect that foodgrains should be distributed to the poor people in Agastheeswaram and Thovalai Taluks, Kanyakumari District through ration cards after the procurement of surplus paddy in those areas by the Government during 1974 ; and

(*b*) if so, the action taken thereon by the Government?

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள உபரி நெல்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அகஸ்தீஸ்வரம், தோவாளை தாலுக்காக்களில் 1974 ஆம் ஆண்டு உபரி நெல்லை விதிப்பு நெல்லாக அரசு வாங்கியபின் அங்கு வாழும் ஏழை மக்களுக்கு பங்கீட்டு அட்டைகள் மூலம் உணவு தானியம் வழங்க வேண்டுமென்று முறையீடு ஏதும் வந்ததுண்டா?